**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A., B.L.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**
**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 09 ஆம் நாள் திங்கள்கிழமை**
**<u>அசல் வழக்கு எண். 31/2024</u>**

ராதாகிருஷ்ணன், த/பெ.பெரியசாமி, வயது சுமார் 40, வசிப்பிடம்– குழந்தைப்பட்டி, கள்ளை கிராமம், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம்

**.....வாதி**

**//எதிர்//**

1. பழனிவேல், த/பெ.ரெங்கன், வயது சுமார் 40, வசிப்பிடம் – பூவாயிப்பட்டி, கள்ளை கிராமம், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம்
2. மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கரூர் மாவட்டம்
3. மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கரூர் மாவட்டம்
4. வருவாய் கோட்டாட்சியர், கோட்டாட்சியர் அலுவலகம், குளித்தலை.
5. வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், குளித்தலை

**..... பிரதிவாதிகள்**

தாவா A முதல் D ஷெட்யூல் சொத்துக்களை வாதி அனுபவிப்பதை பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ, முகவர்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யாமல் இருப்பதற்கு ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டியும் மற்றும் வழக்கின் செலவுத்தொகை கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா தாக்கல் செய்த தேதி – 08.03.2024

வழக்குமூலம் – 20.12.2010, 19.10.2012, 17.08.2017, 05.05.2020, 02.01.2023, 04.02.2024 இடம். கள்ளை கிராமம், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம் என்ற இடத்தில் எழுந்துள்ளது.

**<u>Details of Valuation</u>**

| | |
|---|---|
| தாவா A முதல் D ஷெட்யூல் சொத்துக்களுக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு மதிப்பு | - ரூ.1000.00 |
| அதற்கு கோர்ட் பீஸ் பிரிவு 27(c)ன் படி கோர்ட் பீஸ் | - ரூ.30.00 |
| மொத்த வழக்கு மதிப்பீடு | - ரூ.1000.00 |
| மொத்த நீதிமன்ற கட்டணம் | - ரூ.30.00 |

இவ்வழக்கு என் முன்பாக 09.03.2026 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.விஜயகுமார் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.ஜாபர் ஷேட் அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 5ம் பிரதிவாதிகள் தரப்பில் அரசு

வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், வாதியை நீதிமன்றத்தில் அழைத்த போது வருகையில்லாததால், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்பாணை

வாதியை நீதிமன்றத்தில் அழைத்த போது வருகையில்லை. இவ்வழக்கு ஏற்கனவே விசாரணை அட்டவணையில் போடப்பட்டிருந்தும், வாதி தரப்பில் இருந்து வழக்கை நடத்த முயற்சிக்கவில்லை. எனவே அசல் வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

## தாவா சொத்து விபரம்

**A ஷெட்யூல்**

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், குளித்தலை சார்பதிவகம், கள்ளை கிராமம், சர்வே எண்.379 திட்டம் ஹெக்டேர் 4.60.0 க்கு ஏக்கர் 2.15 சென்ட் நிலமும், இதற்குரிய சகல மாமூல் வழி நடை பாத்தியங்கள் உள்படவும், இதற்கு நான்கு எல்லை விபரம், பாலமுத்து வகையறா நிலத்திற்கு கிழக்கு, மருதை மகன் கருப்பண்ணன் வகையறா நிலத்திற்கு மேற்கு, வடக்கு, நாராயணன் மகன் இருளன் வகையறா நிலத்திற்கு தெற்கு இதற்குள் ஏக்கர் 2.15 சென்ட் நிலம்.

**B ஷெட்யூல்**

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம் குளித்தலை சார்பதிவம், கள்ளை கிராமம், சர்வே எண்கள்.

1. 379 திட்டம் ஹெக்டேர் 4.68.0 க்கு ஏக்ககர் 11.56 ல் பாலமுத்து வகையறா நிலத்திற்கு கிழக்கு, கீழ்கண்ட 2 வது அயிட்டத்திற்கு மேற்கு, பெரியசாமி நிலத்திற்கு தெற்கு, உங்கள் இதர நிலத்திற்கு வடக்கு, இதற்குள் ஹெக்.0.87.0 க்கு ஏக்கர் 2.15 சென்ட்.
2. 380 திட்டம் ஹெக்டேர் 3.25.5 க்கு ஏக்கர் 8.04 ல் அங்கம்மாள், பழனியம்மாள், சரஸ்வதி இவர்கள் இதர நிலத்திற்கு கிழக்கு, கண்ணன், இருளன், பழனி இவர்கள் நிலத்திற்கு மேற்கு, இருளன், குமரன், பெருமாள், பெரியண்ணன் இவர்கள் நிலத்திற்கு தெற்கு, பழனிவேல் நிலத்திற்கு வடக்கு இதற்குள் ஹெக்டேர் 1.21.5 க்கு ஏக்கர் 3.00 நிலம்.

ஆக கூடுதல் ஹெக்.2.08.5 க்கு ஏக்கர் 5.15 சென்ட் நிலம் கிரையம். மேற்படி சொத்திற்குண்டான சகல மாமூல் வழி தடநடை பாதை பாத்தியங்கள் உள்படவும்.

**C ஷெட்யூல்**

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், கள்ளை கிராமம், சர்வே எண் 380 ல் 3.25.5 ஹெக்டேரில் 8.04 ல் ஏக்.0.17 சென்ட் நிலம், இதற்குண்டான நான்கெல்லை விபரம் முருகேசன் (எ) முருகேஸ் நிலத்திற்கு வடக்கு, வாதியின் இதர நிலத்திற்கு

கிழக்கு, மேற்கு, மருதை மகன் கருப்பண்ணன் வகையறா நிலத்திற்கு தெற்கு இதற்குள் 0.17 சென்ட் நிலம்.

**<u>D ஷெட்யூல்</u>**

1. கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், கள்ளை கிராமம், சர்வே எண்379 ல் ஹெக் 4.68.0 க்கு ஏக் 11.56 சென்டில் உங்கள் இதர நிலத்திற்கு வடக்கு, என் இதர நிலத்திற்கு மேற்கு, பாலமுத்து வகையறா நிலத்திற்கு கிழக்கு, ஆர்.பெரியசாமி நிலத்திற்கு தெற்கு, இதற்குள் ஹெக்.0.04.0 க்கு ஏக்.0.10 சென்ட் பட்டா எண்.1533
2. 380 ஹெக்.3.25.5 க்கு ஏக்.8.04 செண்டில்

**<u>தென்வடல் தாக்கு – 1</u>**

என் இதர நிலத்திற்கு கிழக்கு, சர்வே எண்.381/2 முதல் 381/7 வரை உள்ள நிலங்களுக்கு மேற்கு, சர்வே எண்.280 நிலத்திற்கு தெற்கு, எங்கள் இதர நிலத்திற்கு வடக்கு, இதற்குள் ஹெக்.0.04.0 க்கு ஏக்.0.10 சென்ட் பட்டா எண்.1533.

**<u>மேற்படி நம்பரில் கிழமேல் தாக்கு – 2</u>**

என் இதர நிலத்திற்கு கிழக்கு, தெற்கு, மேற்கு, சர்வே எண்381/8, 381/10 நிலங்களுக்கு வடக்கு, இதற்குள் ஹெக்.0.04.0 க்குஏக்0.10 செண்ட் பட்டா எண்.1533.

ஆக கூடுதல் ஏக்.0.30 சென்ட் நிலமும், மற்றும் மேற்படி சொத்துக்கு உண்டான சகல மாமூல் வழி தட சடை பாதை பாத்தியங்கள் சகிதம் உள்பட.

| **வ.எண்** | **செலவுத் தொகை விபரம்** | **வாதி** | **பிரதிவாதி ரூ.** |
|---|---|---|---|
| 1 | நீதிமன்றக் கட்டணம் | செலவுத்தொகை இல்லை | |
| 2 | எதிர்வழக்குரை தயாரிக்க | | |
| 3 | வக்காலத்து | | |
| 4 | படிச் செலவு | | |
| 5 | வழக்கறிஞர் கட்டணம் | | |
| | **மொத்தம்** | | |

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 09 ம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையிட்டு வழங்கப்பட்டது.

Sd/–R. தமிழரசி

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை.**

**********************
**PDM, Kulithalai**
**O.S.No.31/2024**
**DECREE**
**D.D.09.03.2026**
**********************